12.08.2025

O.S.No. 88/2023

PW1–மகாலிங்கம் – த/பெ. குத்தாலிங்கம்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 12.08.2025

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதி தரப்பில்)

1. பிரதிவாதி எனது அண்ணனின் மகன். வழக்கு சொத்தும் வேறு சொத்துக்களும் எனது தந்தைக்கு பாத்தியமாக இருந்தது என்றால் சரிதான். எனது தந்தைக்கு 3 கோட்டைவிதைப்பாடு நிலம் உண்டு என்றால் சரிதான். 1 கோட்டை விதைப்பாடு என்பது 21 மரக்கால் விதைப்பாடு. 8 செண்ட் என்பது 1 மரைக்கால் விதைப்பாடு.

2. எனது தந்தைக்கு 6 மகன்கள். எனதுதந்தை இருக்கும்போதே அவரது மகன்களுக்கு 55 ஆண்டுகளுக்கு முன்பு பாகபிரிவினை செய்துகொடுத்துவிட்டார். பாகபிரிவினைக்கு பின்னிட்டு அவரவருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்திற்கு பட்டா வழங்கப்பட்டது. என்தந்தை பாகம் கொடுத்தஇடத்தில் நான் மட்டும் 20 செண்ட இடத்தைவிற்றுவிட்டேன். மற்ற யாரும் விற்கவில்லை.

3. பிரதிவாதி தனது தந்தைக்கு ஒரே மகன். பிரதிவாதியின் தந்தை இறந்துவிட்டார். நான் இந்த வழக்கை 32 செண்டிற்கு தாக்கல் செய்துள்ளேன். 32 செண்டிற்கான பட்டா பிரதிவாதியின் பெயரில் உள்ளது, ஆனால் அனுபவம் எனது வசம்தான் உள்ளது. வழக்கு தாக்கல்செய்துள்ள தாவா இடத்திற்கும் எனக்கும் எந்த அனுபவமும் உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா இடத்தில் 4 தென்னைமரங்கள்

காய்த்துக்கொண்டுதான் உள்ளது. காய்க்காத தென்னைமரங்கள் 4 உள்ளது என்றால் சரிதான். மேற்படி சங்கதிகளை எனதுமுதல் விசாரணையிலோ, பிராதிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் எனது அனுபவத்தில் இல்லை என்பதால்தான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் வசம்தான் வழக்குசொத்தின் அனுபவம் உள்ளது என்றால் சரியல்ல. நான் எனது பிராதில் தாவா சொத்தில் நான்குமாலை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக நான்குமாலை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் ஆவணத்தை நான் தாக்கல் செய்யாததற்கு காரணம் அது எனக்கு ஒதுக்கப்படாததததுதான் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் 2010 மற்றும் 2012 ஆண்டில் எனது பெயரில் நான் செலுத்திய தீர்வை கட்டணம் என்றால் சரிதான். அப்பொழுதே வழக்கு சொத்துக்கான பட்டா எண்.756 பிரதிவாதியின் பெயரில் இருக்கும் விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

5. நான் வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுத்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் அருகாமையில் உள்ள நபர்களின் தூண்டுதலின்பேரில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.